கத்திற்கு அதிகப் பணம் கிடைக்குமே, ஆகவே முனைப்பாக இந்த முயற்சியை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசாங்கத்தின் வருமானத்தில் அக்கறை கொண்டு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தைப் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

அரசுப் போக்குவரத்துத் துறை

■324 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசாங்க பஸ் சர்வீசுக்குத் தனி போர்டு அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : போக்குவரத்துத் துறையில் அது பெரிய தொரு ஸ்தாபனமாக இருக்கிற காரணத்தினால் நஷ்டமும் அதே போல் அதிகச் சிரமங்களும் இருக்கின்றன. இதைப் போக்கக் கூடிய அளவில் மாவட்டவாரியாக 25 பஸ்கள் அல்லது 50 பஸ்கள் என்று சொல்லத்தக்க அளவிற்குத் தனித்தனியாக ஒவ்வொரு அமைப்பாகப் பிரித்து நடத்தினால் நிர்வாகத்திற்கும் வசதியாக இருக்கும். லாபகரமாக இருப்பதற்குத் தக்கபடியாகவும் அமையும். எனவே அதை ஆராய்ச்சி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : அரசாங்கப் பஸ்களில் அதனுடைய பராமரிப்பு நிர்வாகம் சரியாக இல்லாமலிருப்பதும், அதில் இருக்கிற போர்டுகள் கூட—சாதாரணமாக வைத்துக்கொண்டிருக்கிற, இன்ன இடத்திற்குப் போய் சேரும், என்பது கூடச் சரியாக இல்லாமல், குடி தண்ணீர் கூட இல்லாமல் மிக மோசமாக இருப்பதைக் கவனித்துத் தக்க ஏற்பாடுகள் செய்வார்களா ? போர்டு இல்லாவிட்டாலும் கூட வேறு எதாவது ஒரு கண்காணிப்பு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கத்திற்கு எண்ணமுண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஹை பவர் கமிட்டி ரிப்போர்ட்டின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதைப் பரிசீலித்து முடிவு எடுத்த பிறகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Dr. H. V. HANDE : Sir, after the new Minister took over this department, has he had time to go into the problems of transport, whether it is not a fact that a number of people are complaining of inefficient service . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, போர்டு அமைக்கிறது பற்றித்தான். அதைப்பற்றிக் கேளுங்கள்.

Dr. H. V. HANDE : The supplementary question is directly connected with the subject.

I would like to have a clear-cut answer and request the Minister not to give an evasive answer. What are the complaints that he has received so far about transport, on what basis this board is going to function and whether the travelling facilities will be one of the subjects to which the board will address itself?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போர்டு அமைக்கிறதுபற்றித் தான் கேள்வி. நீங்கள் கேட்கிற தகவல்கள் மினிஸ்டரிடம் இருக்குமா ?

Dr. H. V. HANDE : Will the Minister be able to tell us the terms of reference of the Board and the basis on which it is going to function ?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : I have already answered that at present there is no proposal to constitute the board. My Friend said that there was a change of portfolio and that that might cause some improvement. I do not agree.

மலுமிச்சாம்பட்டி கிராமத்துக்குக் குளம்

■325 வின—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினைக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தாலுக்கா, மலுமிச்சாம்பட்டி கிராமத்தில் உள்ள சர்க்கார் பள்ள வாரி புறம்போக்கு சர்வே 648, 213, 212 எண்ணுள்ள 11 ஏக்கர் 98 செண்டு நிலத்தில் குளம் வெட்டவேண்டி அக் கிராம விவசாயிகள் 12—8—1968 அன்று சர்க்காருக்கு விண்ணப்பம் அனுப்பினார்களா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். நில அளவை எண் 648, 212, 213-இல் குளம் ஒன்றை வெட்ட வேண்டுமென வேண்டி அனுப்பப்பட்ட முறையீடு ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவரால் பெறப்பட்டு, அது கோயம்புத்தூர் கோட்ட நிர்வாகப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டது.

(இ) இந்தப் பணி குறித்த செயற்குறிப்புகள் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, இப்பணிக்காக "வறட்சித் தணிப்பு பணிகளின்" கீழ் ரூபாய் 79,000 செலவிட இசைவு அளிக்கப்பட்டுள்ளது.